Deposition of witness.
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ATHOOR.
C.C.No.31/2021

**Deposition of PW.1**

**பெயர்** : சங்கர நாராயணன்

க/பெ. : பலராமன்

**கிராமம்** : திண்டுக்கல் நாகல் நகர்

**தாலுகா** :
**தொழில்** : மெஸ் வியாபாரம்

**மதம்** :
**வயது.** : 47/2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.12.2022

முதல் விசாரணை

நான் திண்டுக்கல்லில் குடியிருந்து கொண்டு ஐஸ்வர்யா என்ற பெயரில் மெஸ் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 19.11.2020 அன்று தேனி பி.சி பட்டியில் ஒரு விழாவிற்கு சமையல் ஆடர்பிடித்திருந்தோம். அன்றைய தினம் சமையலுக்கு தேவையான மளிகை சாமான்கள் அனைத்தையும் 407 வாகனத்தில் ஏற்றிக்கொண்டு நான், டிரைவர் முருகன், செந்தில் குமார், ஆகியோர் டிரைவரின் சீட்டின் அருகிலும் வண்டியின் பின்பகுதியில் ராணி, தேவிகா, தேவகி, மோகனா, தெய்வானை ஆகியோர் அமர்ந்திருந்தார்கள். எங்களது த407 வாகனம் செம்பட்டி அருகே உள்ள புதுக்கோடாங்கிபட்டி அருகே சென்று கொண்டிருந்தபோது எதிரி திசையில் வந்த பூவாத்தாள் என்ற தனியார் பேருந்து செம்பட்டியில் இருந்து திண்டுக்கல் நோக்கி தாறுமாறாக வந்து சரியான முறையில் ஓட்டி சென்ற எங்களது வாகனத்தின் மீது டக்கென்று மோதியது. அதனால் எங்களது வாகனத்தின் டிரைவர் சீட்டில் இருந்து அதன் பின் பகுதி வரை அடித்து கொண்டு சென்றுவிட்டது. தேவகி என்பவர் வாகனத்தின் பின்பகுதியில் இருந்து தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே இறந்து விட்டாா. எங்கள் வாகனத்தின் டிரைவர் முருகன் என்பவருக்கு தலை, மற்றும் தொடை பகுதியில் அடிபட்டு பலத்த காயம ஏற்பட்டிருந்ததது அப்போது அவருக்கு உயிர் இருந்தது. எனக்கு தலை, கண் பகுதியில் மற்றும தோள் பட்டையில் கை இறங்கி விட்டது. பின்னால் உட்கார்ந்திருந்த ராணி என்பவருக்கு கை மற்றும் காலில் அடிபட்டு காயம் ஏற்பட்டிருந்தது. தேவிகா என்பவருக்கு காலில் அடிபட்டு காயம் ஏற்பட்டது. தெய்வானை மற்றும் மோகனா விற்கு லேசான காயம் ஏற்பட்டது முன்னால் எனது அருகில் அமர்ந்திருந்த செந்தில் குமாருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அதன்பிறகு 108 ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். டிரைவர் முருகன் திண்டுக்கல் அரசு மருததுவமனைக்கு அழைத்து

சென்றவுடனேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்பு திண்டுக்கல் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது செம்பட்டி போலீசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். அதன்பிறகு நான் மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல்லில் உள்ள சிட்டி மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். விபத்து ஏற்படுத்திய பூவாத்தாள் தனியார் பேருந்தை யார் ஓட்டிவந்தார்கள் என்று அப்போது எனக்கு தெரியாது. அதன் பிறகு போலீசார் தான் வடிவேல் என்பவர் ஓட்டி வந்ததாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

தேனி மாவட்டம் பி.சி பட்டியில் 20ம் தேதி விசேசம் நடைபெறுவதாக இருந்தது 19ம் தேதி நாங்கள் மாலை 6.30 மணிபோல் கிளம்பினோம். 20ம் தேதி பி.சி பட்டியில் விசேசம் இருந்ததாக போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். புகார் வாக்குமூலத்தில் 20ம் தேதி பி.சி பட்டியில் உள்ள விசேசம் குறித்து சொல்லியுள்ளேனா என்றால் பதற்றத்தில் சொல்லவில்லை. பி.சி பட்டியில் யார் வீட்டு விசேசம் என்று தெரியும் யார் வீட்டில் விசேசம் என்று போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. திண்டுக்கல்லில் இருந்து 6.30 மணிக்கு கிளம்பினோம். புதுகோடாங்கிபட்டிக்கு 7.00 மணிக்கு வந்துவிட்டோம். சம்பவம் நடைபெற்ற சமயத்தில் ஒரு காய்கறி வண்டி எங்களுக்கு எதிர் திசையில் வந்து எங்களை கிராஸ் செய்து எங்களை கடந்து சென்றதா என்றால் இல்லை. நாங்கள் வந்த வாகனத்தின் ஓட்டுநர் எதிர் திசையில் காய்கறி வாகனம் கடந்து சென்று விட்டதால் அதற்கு பின்னால் வந்த பேருந்தை கவனிக்காமல் பேருந்தின் மீது மோதிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் 10 வருடங்களாக மெஸ் நடத்தி வருகிறேன். நான் மெஸ் நடத்துவதற்கு அரசிடம் இருந்து உரிமம் பெற்றுள்ளேன். எங்களது வண்டியின் ஓட்டுநரிடம் வேகமாக சென்று விசேச வீட்டில் சமைக்கவேண்டும் என்பதற்காக ஓட்டுநரை வேகமாக ஓட்ட சொல்லி கட்டாயபடுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களது 407 வாகனத்தில் அதிகமான லோடு ஏற்றி சென்றோம் என்றால் சரியல்ல. எனது வாகனத்தின் ஓட்டுநர் காய்கறி லாரி கடந்து சென்றவுடன் அதன் பின்னால் வந்த எதிரியின் பேருந்தை எனது வாகனத்தின் ஓட்டுநர் கவனிக்காததால் அந்த வாகனத்தின் ஓட்டுநர் பக்கமாக மோதியதால் எங்களது வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்தவர்கள் தூக்கி கீழே வீசப்பட்டு அடிப்பட்டு இறந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எங்கள் வாகனத்திற்கு அதிக பாதிப்பு இருந்ததால் எதிரியின் வாகனம் பெரிய வாகனம் என்பதால் நாங்கள் கொடுத்தத புகாரில் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரி பேருந்தை சரியான முறையில் தான் ஓட்டி வந்தார் எனது வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான்

இறந்தவர்களுக்கும் காயம் பட்டவர்களுக்கும் இழப்பீடு வாங்கவேண்டும் என்பதற்காக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor